குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

அ.சா. 3 சி.சி. எண்.54/2012

2023–ம் ஆண்டு மே 08–ம் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சி 3–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரசேகரன் | ஜாதி | |
| தந்தை பெயர் | வீரபத்திரன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Accused (Sakthivel) called absent. Petition U/s. 317 CrpC filed and allowed. Advacate Mr. Thiyagarajan Present for accused. APP Mr. Shanmugasundaram present)

<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசார</u>ணை.

1. நான் கருப்பூரில் குடியிருக்கிறேன். நான் ஏ.கே.ஆர்.எக்ஸ்பிரஷ் பார்சல் சர்வீஸில் வேலை செய்கிறேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்த போது நான் மேற்படி நிறுவனத்தில் தான் வேலை செய்து கொண்டிருந்தேன். நான் காலை 9.30 மணிக்கு வேலைக்கு சென்று மாலை 6.00 மணிக்கு வீடு திரும்புவேன். சம்பவ இடம் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் இடம் என்றால் சரிதான்.

2. பொதுவாக சம்பவ இடத்தில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் வாகனங்கள் மெதுவாக தான் செல்லும் என்றால் மக்கள் கூட்டம் அதிகம் இருந்தால் மெதுவாக செல்லும். சம்பவம் மாலை 7.00 மணியளவில் நடைபெற்றது என்று சொல்லியுள்ள நிலையில் அந்த சமயத்தில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் சம்பவத்தை பார்த்தேன் என்றால் நான் எனது நண்பர் பாலசுப்பரமணியம் டீ.அருந்தி கொண்டிருந்த போது விபத்தை நேரில் பார்தேன்.

3. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. விபத்து நடந்த இடத்திற்கும், நானும், எனது நண்பரும் டீ.அருந்தி கொண்டிருந்த உதயம் காபி கடைக்கும் இடையே சுமார் 10 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். விபத்தில்

அடிப்பட்டிருந்த நபர் சேலம் மருத்துவமனையில் உயிரிழந்ததாக மறுநாள் விசாரித்து தெரிந்து கொண்டேன்.

4. அ.சா.1 பாலசுப்பரமணியன் எனது நண்பர் என்பதாலும், இவ்வழக்கில் இறந்தவர் அ.சா.1 னின் உறவினர் என்பதாலும், அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>. இல்லை.

சாட்சி. சந்திரசேகரன்

ஓம்/–S. சர்மிளா,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.